தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com




RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 147 | 4 Pages | 25.12.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 147 | 4 பக்கங்கள் | 25.12.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்**
**கொல்லாமை சூழும் நெறி**

**விளக்கம்:**

**நல்ல வழி என்று அறநூல்களால் சொல்லப்படுவதுஎதுஎன்றால்,எந்தஉயிரையும் கொல்லாத அறத்தைப் போற்றும் நெறியாகும்.**

## ரஷியாவில் அரிசி ஏற்றுமதிக்கு மேலும் 6 மாதங்கள் தடை நீட்டிப்பு


மாஸ்கோ, டிச.25

கடந்த 2022ம் ஆண்டு ரஷியாவில் உள்ள பெடோரோவ்ஸ்கி நீர்மின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்து மற்றும் ரஷியாவின் முதன்மை அரிசி உற்பத்தி செய்யும் பகுதியான கிராஸ்னோடர் பகுதியில் உள்ள நெல் வயல்களில் ஏற்பட்ட பெருவெள்ளம் ஆகியவற்றின் காரணமாக, அரிசி ஏற்றுமதிக்கு தற்காலிக தடை விதித்து அந்நாட்டு அரசு உத்தரவிட்டது.

உள்நாட்டு சந்தைக்கு நிலையான விநியோகத்தை உறுதி செய்வதற்காக டிசம்பர்31,2024வரைஅரிசிஏற்றுமதிக்கானதடைநீட்டிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், நெல் விதைகளைத் தவிர, அரிசி மற்றும் அரிசிப் பொருட்களைஏற்றுமதிசெய்வதற்கானதடையைமேலும்6மாதங்களுக்கு, ஜூன் 30, 2025 வரை நீட்டித்து ரஷிய அரசு உத்தரவிட்டுள்ளது.

அதே சமயம், அரிசி ஏற்றுமதிக்கான கட்டுப்பாடுகள் யூரேசியன் பொருளாதார ஒன்றியம், அப்காசியா, தெற்கு ஒசேட்டியா, அத்துடன் மனிதாபிமான உதவிகள் மற்றும் சர்வதேச போக்குவரத்துக்கான ஏற்றுமதி ஆகியவற்றிற்கு பொருந்தாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வெடிமருந்து தொழிற்சாலையில் பயங்கர வெடிவிபத்து; 12 பேர் பலி



அங்காரா, டிச.25

துருக்கி நாட்டின் பிலிகிசர் மாகாணம் கரிசி நகரில் ராணுவ ஆயுதங்களுக்கு தேவையான வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது. இந்த தொழிற்சாலையில் 50க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், இந்த வெடிமருந்து தொழிற்சாலையில் இன்று பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இந்த வெடிவிபத்தில் 13 பேர் உயிரிழந்தனர். மேலும், 3 பேர் படுகாயமடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளிண்டன் மருத்துவமனையில் அனுமதி



வாஷிங்டன், டிச.25

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் (வயது 78). இவர் கடந்த 1993ம் ஆண்டு முதல் 2001ம் ஆண்டு வரை 2 முறை அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவி வகித்துள்ளார். இவர் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனின்ஜனநாயககட்சியை சேர்ந்தவர் ஆவார்.

தற்போது பில் கிளிண்டன் குடும்பத்துடன் வாஷிங்டன்னில் வசித்து வருகிறார். இந்தநிலையில் அவருக்கு திடீரென காய்ச்சல் ஏற்பட்டது. இதனையடுத்து வாஷிங்டன்னில் உள்ள பிரபல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.அங்குஅவருக்குபரிசோதனைமேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக பில் கிளிண்டனின் பணியாளர்களின் துணைத் தலைவர் ஏஞ்சல் யுரேனா கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் தனது எக்ஸ் பக்கத்தில்,

பில் கிளின்டன் காய்ச்சல் காரணமாக மெட்ஸ்டார் ஜார்ஜ் டவுன் பல்கலைக்கழகமருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.அவருக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. அவர் மருத்துவ கண்காணிப்பில் உள்ளார். அவர் நலமுடன் இருக்கிறார். அவருக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது என்று கூறியுள்ளார். சமீபத்தில் நடந்து முடிந்த அமெரிக்க தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட கமலா ஹாரீஸ்க்காக பில் கிளிண்டன் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா: ரெயிலில் பெண்ணை தீ வைத்து எரித்து கொன்ற நபர் கைது

வாஷிங்டன், டிச.25

அமெரிக்காவின் நியூயார்க் மாகாணம் புரூக்ளின் நகா் நோக்கி ஒரு ரெயில் சென்று கொண்டி ருந்தது. மன்ஹா ட்டன் ரெயில் நிலையத்தில்



நின்றுகொண்டிருந்த அந்த ரெயிலில் ஒரு இளம்பெண் தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு சென்ற ஒரு வாலிபர் அவரது ஆடையில் தீ வைத்தார். இதனால் உடல் முழுவதும் தீ பற்றியதால் இளம்பெண் அலறி துடித்தார். ஆனால் அவர் சாகும்வரை அந்த வாலிபர் நின்று ரசித்துக் கொண்டிருந்தார். பின்னர் மன்ஹாட்டன்ரெயில்நிலையத்தில்இறங்கியஅவா் சாதாரணமாகநடந்து சென்றார். இதனையடுத்து அங்கு விரைந்த போலீசார் அந்த வாலிபரை மடக்கி பிடித்து கைது செய்தனர். இதுகுறித்து வழக்கு பதிவு செய்த போலீசார் முன்விரோத தகராறில் இந்த கொலையை செய்தாரா? என்ற கோணத்தில் விசாரித்து வருகின்றனர்.

# 21 மாவட்டங்களில் 400 வகுப்பறை கட்டிடங்கள்: முதல்வர் திறந்து வைத்தார்

சென்னை, டிச.25

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, ராமநாதபுரம், ராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 171 பள்ளிகளில் 56.11 கோடி ரூபாய் செலவில் 350 புதிய மற்றும் கூடுதல் வகுப்பறைகள்;

அரசுப் பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த தூய்மைக்கு புத்துயிர் அளித்தல் திட்டத்தின் கீழ், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், ராமநாதபுரம், ராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 24 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 8.33 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50 புதிய மற்றும் கூடுதல் வகுப்பறைகள் என மொத்தம் 21 மாவட்டங்களிலுள்ள 195 பள்ளிகளில் ரூ.64.44 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 400 வகுப்பறைக் கட்டிடங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.



மேலும் 6 மாவட்டங்களில் 35 கோடியே 24 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடங்கள் என மொத்தம் 99 கோடியே 68 லட்சம் ரூபாய் செலவிலான கட்டிடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 8 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பிலான 95 வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# T.புதுப்பாளையத்தில் எம்.ஜி.ஆர் 37 ஆம் ஆண்டு நினைவு நாள்: மவுன அஞ்சலியும் அன்னதானம்

கள்ளக்குறிச்சி, டிச.25

கள்ளக்குறிச்சி மாவட்ட திருவெண்ணெய்நல்லூர் தாலுக்கா T.புதுப்பாளையம் கிராமத்தில் முன்னாள் முதல்அமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் 37 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாண்புமிகு சட்ட மன்ற எதிர் கட்சி தலைவர் எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்களின் ஆணைக்கிணங்க கள்ளக்குறிச்சி மாவட்ட கழக செயலாளர் இரா.குமரகுரு அறிவுறுத்தலின் பேரில் ஒன்றிய கழக செயலாளர் திரு.k.இராமலிங்கம் அவர்களின் வழிக்கட்டுதலின் பேரில் கள்ளக்குறிச்சி மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் முருகன் நடராஜன் அவர்களின் ஏற்பாட்டில் அவருடைய தந்தை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்



ஆதி. நடராஜன் அவர்களின் தலைமையில் அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆர் யின் உருவபடத்துக்கு மாலை அணிவித்து மலர் தூவி மவுன அஞ்சலி செலுத்தினார் தொடர்ந்து பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் P. பலராமன், மாவட்ட விவசாய அணி இணைச் செயலாளர் ஆதி. வெங்கடேசன் , கிளை கழக செயலாளர் D.முருகன் , முன்னாள் கிளை கழகச் செயலாளர் M.ராமு ,மாவட்ட MGR இளைஞர் அணி இணைச் செயலாளர் P.ரவி மாவட்ட விவசாய அணி இணைச் செயலாளர் R. வெங்கடராமன் , மாவட்ட மாணவரணி துணைச் செயலாளர் J.சஞ்சீவி , மாவட்ட மகளிரணி துணைச் செயலாளர் பிரியா ராஜேஷ் ,ஒன்றிய இளைஞர் பாசறை, இளம் பெண்கள் பாசறை துணைத் தலைவர் த. ஐயப்பன் , ஒன்றிய மகளிர் அணி பொருளாளர் மு. புஷ்பா , கிளை கழக செயலாளர் மணிகண்டன் கழக தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் உடன் இருந்தனர்.

# தென்காசி மாவட்ட காவலர்களுக்கு பணியிடமாறுதல் கலந்தாய்வுக் கூட்டம்

தென்காசி, டிச.25

தென்காசி மாவட்ட காவலர்களுக்கு பணியிடமாறுதல் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது தமிழக காவல்துறையில் பணிபுரிந்து வரும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் ஒரு காவல் நிலையத்தில் மூன்று ஆண்டுகள் பணி புரிந்தால் பணியிடமாற்றம் செய்யப்படுவது வழக்கம். இந்நிலையில் தென்காசி மாவட்டத்திலுள்ள காவல் நிலையங்களில் பணிபுரிந்து வரும் காவலர்களில் மூன்று வருடங்களை நிறைவு செய்துவேறுகாவல்நிலையத்திற்கு பணியிட மாறுதல் வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு நேரடி கலந்தாய்வு இன்று 23.12.2024 மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.V.R. ஸ்ரீனிவாசன் அவர்கள் தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இந்த கலந்தாய்வு கூட்டத்தில் 71 காவல் ஆளினர்கள் கலந்து கொண்டனர். காவல் ஆளினர்கள் விருப்பம் தெரிவித்த காவல் நிலையங்களில் அவர்களுக்கு பணியிட மாறுதல் வழங்கப்ப ட்டதால் மிகவும் மனமகிழ்ச்சி அடைந்தனர்.



# கிறிஸ்துமஸ் பண்டிகை: சென்னையில் 8,000 போலீசார் பாதுகாப்பு




சென்னை, டிச.25

கிறிஸ்தவர்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான கிறிஸ்துமஸ் பண்டிகை நாளை (புதன்கிழமை) உலகம் முழுவதும் மிகவும் உற்சாகமாக கொண்டாடப்படுகிறது. வீடுகள், தேவாலயங்களில் கிறிஸ்துமஸ் விழாவை கொண்டாட மக்கள் தயாராகி வருகின்றனர்.

இந்த நிலையில், கிறிஸ்துமஸ் பண்டிகையொட்டி சென்னையில் இன்றிரவு முதல் நாளை வரை 8,000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். மக்கள் அமைதியாகவும், பாதுகாப்பாகவும் கிறிஸ்துமஸ் கொண்டாட சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சென்னையில் 350 தேவாலயங்களில் சுழற்சி முறையில் போலீசார் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மெரினா, சாந்தோம் பெசன்ட் நகர், உள்ளிட்ட கடற்கரைகளுக்கு செல்லும் மக்கள் கடலில் இறங்காதவாறு கண்காணிக்கப்பட உள்ளனர். மக்கள் அதிகம் கூடும் இடங்களில் சிசிடிவி கேமரா, டிரோன் மூலம் கண்காணிக்கபடுகிறது. சென்னையில் முக்கிய சந்திப்புகளில் தடுப்புகள் அமைத்து வாகன சோதனையிலும் போலீசார் ஈடுபடுத்தப்பட உள்ளனர். மேலும், பைக் ரேஸ், மது போதையில் வாகனங்கள் ஓட்டுவோர் மீது நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தினகனி



# பொங்கல் விளையாட்டு போட்டிகளுக்காக இளவட்டக்கல் தூக்கி பெண்கள், வாலிபர்கள் தீவிர பயிற்சி



பணகுடி, டிச.25

தமிழகத்தில் தென்மாவட்டங்களில் பொங்கல் பண்டிகையையொட்டி விளையாட்டு போட்டிகள் நடத்தப்படும்.

இதில் தமிழர்களின் வீரத்தை பறைசாற்றும் வகையில் இளவட்டக்கல் தூக்கும் போட்டிகள் நடத்தப்படுவது வழக்கம். இந்த போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது.

அந்த வகையில் நெல்லை மாவட்டம் பணகுடி அருகே வடலிவிளை கிராமத்தில் இளவட்டக் கல் தூக்கும் விளையாட்டு போட்டி வழக்கம்போல் இந்த பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மிகவும் கோலாகலமாக நடைபெற இருக்கிறது.

இளவட்டக்கல் விளையாட்டு போட்டியில் பங்கு பெற ஆண்கள், பெண்கள் என ஏராளமானோர் தற்போது பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேபோன்று நடைபெற இருக்கும் உரல் தூக்கும் போட்டியிலும் பங்கு பெற இளைஞர்களுக்கு இணையாக இளம்பெண்களும் தங்களை தயார்படுத்தி வருகின்றனர். இப்போட்டியில் உரலை ஒரு கையால் ஏந்தி தலைக்கு மேல் நீண்டநேரம் தூக்கி நிறுத்திவைக்கும் சாதனையும் நடைபெற இருக்கிறது. ஒரு வார கால இடைவெளியில் போட்டி நடைபெற இருக்கும் நிலையில் தற்போது இளம்பெண்கள், வாலிபர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# மதுரை கலெக்டர் அலுவலகம் அருகே நெல், வாழை பயிர்களுடன் விவசாயிகள் நூதன ஆர்ப்பாட்டம்




மதுரை, டிச.25

மதுரை மாவட்டம் மேலூர் அருகே உள்ள அரிட்டாபட்டி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் டங்ஸ்டன் திட்டத்திற்கு சுரங்கம் அமைக்க இந்துஸ்தான் நிறுவனத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்தது. இதற்கு 50க்கும் மேற்பட்ட கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

பல்லுயிர் தளமாக அறிவிக்கப்பட்டுள்ள அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கப்பட்டால் இயற்கை சூழலியல் பாதிக்கப்படுவதோடு விவசாயம் அழிந்து கிராம மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் என கிராம மக்கள் டங்ஸ்டன் திட்டத்திற்கு எதிராக பல் வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்த திட்டத்திற்கு தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தது. மேலும் டங்ஸ்டன் திட்டத்திற்கு சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைத்து கட்சிகளின் ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பிவிட்டார்.

ஆனால் டங்ஸ்டன் திட்டம் தொடர்பாக மத்திய அரசு தற்போது வரை மவுனம் காத்து வருகிறது. இதனால் மதுரை மாவட்டத்தில் தொடர்ந்து போராட்டங்கள் நடந்து வருகின்றன.

அதன்படி இன்று மதுரை கலெக்டர் அலுவலகம் அருகில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அகில இந்திய தொழிலாளர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

இதில் நாயக்கர்பட்டி, அரிட்டாபட்டி, வல்லாளப்பட்டி, கிடாரிப்பட்டி, வெள்ளரிப்பட்டி, தெற்குதெரு, கல்லம்பட்டி, சூரக்குண்டு, எட்டிமங்களம், புளிப்பட்டி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களைசேர்ந்தவிவசாயிகள், பெண்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கரும்பு, வாழை, நெல், ஏர் கலப்பை ஆகியவற்றை ஏந்தி டங்ஸ்டன் திட்டத்திற்கு எதிராக கோஷமிட்டனர்.

# ஓசூரில் யானை தந்தங்கள் கடத்திய 7 பேர் கைது



ஓசூர், டிச.25

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் இ.எஸ்.ஐ. ரிங்ரோடு மத்தம் சர்க்கிள் பகுதியில் நேற்று பிற்பகல் 2.45 மணி அளவில் யானை தந்தங்கள் விற்பனை செய்யப்படுவதாக வனத்துறைக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து ஓசூர் வனக்கோட்ட வன உயிரின காப்பாளர் பகான் ஜெகதீஸ் சுதாகர் உத்தரவின் பேரில் ஓசூர் வனச்சரக அலுவலர் பார்த்தசாரதி தலைமையில் வனத்துறையினர் அங்கு சென்று அதிரடியாக சோதனை நடததினார்கள். அதில் 4 பேர் ஒரு ஜோடி யானை தந்தங்கள் வைத்திருந்தது தெரியவந்தது.

அவற்றை பறிமுதல் செய்த வனத்துறையினர் அதை வைத்திருந்த தேன்கனிக்கோட்டை தாலுகா இருதுகோட்டை அருகே அனுமந்தபுரம்பக்கமுள்ள திப்பனூரை சேர்ந்த வெங்கடேஷ் (27), கர்நாடக மாநிலம் பெங்களூரு மாவட்டம் ஆனேக்கல் தாலுகா சம்மந்தூர் பக்கமுள்ள மாரநாயக்கன அள்ளியைசேர்ந்தவிஜயகுமார் (25), ஊத்தங்கரை தாலுகா நடுப்பட்டி அருகே உள்ள ஒந்தியம்புதூரை சேர்ந்த ஹரிபூபதி (39), ஊத்தங்கரை நாராயண நகரை சேர்ந்த பரந்தாமன் (27) ஆகிய 4 பேரை வனத்துறையினர் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து ஒரு ஸ்கூட்டரும், 4 செல்போன்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

அவர்களிடம் நடத்திய விசாரணையில், இதில் தொடர்புடைய தேன்கனிக்கோட்டை தாலுகா அய்யூரை சேர்ந்த முனிராஜ் (29), பெட்டமுகிலாளம் அருகே உள்ள தொளுவபெட்டா பழையூரை சேர்ந்த லிங்கப்பா (39), பசலிங்கப்பா (42) ஆகிய 3 பேரை கைது செய்தனர்.

இதில் தொடர்புடைய பெட்டமுகிலாளம கிராமம் போப்பனூரை சேர்ந்த பசப்பா (40), ஜெயபுரத்தை சேரந்த மத்தூரிகா (39) ஆகிய 2 பேர் தலைமறைவாகிவிட்டனர். அவர்களை வனத்துறையினர் தேடி வருகிறார்கள்.

கைதான 7 பேரையும் கோர்ட்டில் ஆஜர்படுத்தி ஓசூர் சிறையில் அடைத்தனர்.

# அரசு ஊழியரின் சொத்துக்கள் தனிப்பட்ட விவரங்கள் அல்ல ஐகோர்ட்



கிருஷ்ணகிரி, டிச.25

கிருஷ்ணகிரி மாவட்ட நீர்வளத்துறை உதவிப் பொறியாளர் காளிப்பிரியனின் சொத்து விபரங்களை குறித்து தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து காளிப்பிரியனின் சொத்து விபரங்களை தெரிவிக்கும்படி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை இன்று விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி கார்த்திகேயன், அரசு ஊழியர்களின் பணியை பாதிக்கச் செய்யும் தகவல்கள்தான் பாதுகாக்கப்பட்டவை.

ஆனால், சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த விவரங்கள் வெளியிடப்பட வேண்டும். அரசு ஊழியரின் சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த விவரங்கள், தனிப்பட்ட விவரங்கள் அல்ல என்று கூறிய நீதிபதி இந்த வழக்கை 2 மாதங்களில் பரிசீலித்து முடித்துவைக்க மாநில தகவல் ஆணையத்திற்கு உத்தரவிட்டார்.

# மின்சாரம் தாக்கி தொழிலாளர்கள் உயிரிழப்பு: டிஜிபிக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ்




திருச்சி, டிச.25

திருச்சி கே.கே.நகரில் உள்ள மின்வாரிய அலுவலகத்தில் ஒப்பந்த ஊழியராக வேலை பார்த்து வந்த கல்லுப்பட்டியை சேர்ந்த கலாமணி(45), அதே பகுதி அருணா பட்டியை சேர்ந்த மாணிக்கம்(32) 2 பேரும், கடந்த 18ந்தேதி பெட்ரோல் பங்குக்கு மின் இணைப்பு கொடுக்கும் பணியில்ஈடுபட்டுகொண்டிருந்தனர்.

இருவரும் மின் இணைப்பை துண்டித்துவிட்டு உயர் அழுத்த மின் கம்பத்தில் ஏறினார்கள். அப்போது மின்சாரத்தை சரியாக ஆப் செய்யவில்லை என தெரிகிறது. இதனால் மின் கம்பத்தில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்தது.

2 பேரும் கம்பத்தில் ஏறியதும் அவர்கள் உடலில் மின்சாரம் பாய்ந்தது. இதில் கலாமணி மின் கம்பத்திலேயே உடல் கருகி பலியானார்.

மாணிக்கம் தூக்கி வீசப்பட்டு பலத்த காயம் அடைந்தார். திருச்சி அரசு ஆஸ்பத்திரியில் அவருக்குதீவிரசிகிச்சைஅளிக்கப்பட்டது. எனினும் சிகிச்சை பலன் அளிக்காமல் அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

உரிய பாதுகாப்பு உபகரணங்கள் இருந்தும் மின் ஊழியர்கள் 2 பேர் பலியானது சக ஊழியர்கள் மற்றும் பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதைத்தொடர்ந்து மின்சாரம் தாக்கி ஒப்பந்த தொழிலாளர்கள் பலியான விவகாரம் தொடர்பாக தேசிய மனித உரிமைகள் ஆணையம் தானாக முன்வந்து வழக்குப்பதிவு விசாரணை நடத்தியது.

இந்நிலையில் ஒப்பந்த தொழிலாளர்கள் பலியான விவகாரத்தில் 2 வார காலத்தில் பதில் அளிக்குமாறு டிஜிபிக்கு நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளது.

# விமானங்கள் தாமதம், ரத்தால் இழப்பீடு தருவதாக பயணிகளிடம் நூதன மோசடி அதிகாரிகள் எச்சரிக்கை

ஆலந்தூர், டிச.25

சென்னைவிமானநிலையத்தில் சமீபகாலமாக மோசமான வானிலை, புயல் மற்றும் கனமழை காரணமாக பல விமானங்கள் தாமதம், சில விமானங்கள் ரத்து செய்யப்பட்டது. இதனால் பயணிகள் பாதிக்கப்பட்டனர்.

இதை பயன்படுத்திக் கொண்டு மோசடி கும்பல் தற்போது புதுவிதமாக பாதிக்கப்பட்ட விமான பயணிகளை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு விமான பயணம் தாமதம் அல்லது ரத்து போன்றவற்றிற்கு இழப்பீடுகள் தருவதாக கூறி வங்கி கணக்கு உள்ளிட்ட விவரங்களை கேட்டு சுருட்டி வருகின்றனர்.

இதையடுத்து இந்திய விமான நிலைய ஆணையத்தின் பெயரை பயன்படுத்தி, விமான பயணிகளிடம் நூதன முறையில் மோசடி செய்யும் கும்பல் குறித்து சென்னை விமான நிலைய அதிகாரிகள் பயணிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதில் இந்திய விமான நிலைய ஆணையத்தின் பெயரை பயன்படுத்தி, விமானங்கள் தாமதம் மற்றும் ரத்து ஆனதற்கு தகுந்த இழப்பீட்டுத் தொகையை கொடுக்கப் போவதாக, போலியான செல்போன் அழைப்புகள் மூலம், பயணிகளை ஏமாற்றி வருகின்றனர். அதற்கும் இந்திய விமான நிலைய ஆணையத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது.


அதைப் போன்ற இழப்பீடுகள் கொடுக்கும் திட்டமும் இல்லை. எனவே இதைப் போன்ற போலியான செல்போன் அழைப்புகள் வந்தால், பயணிகள் யாரும் அதை நம்ப வேண்டாம்.

பயணிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டால், உடனடியாக அவர்கள் பயணிக்க இருந்த விமான நிறுவனத்தை தொடர்பு கொண்டு, விவரங்கள் கேட்டு அறிந்து, தங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

மோசடி கும்பலிடம் வங்கி கணக்கு எண் உள்ளிட்ட விபரங்களை தெரிவிக்க வேண்டாம். அவ்வாறு செய்தால் பயணிகளுக்கு பெரும் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. போலியான அழைப்புகள் வந்தால் அந்த தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அருகில் உள்ள போலீஸ் நிலையத்தில் பயணிகள் புகார் செய்யுங்கள் என்று அறிவித்து உள்ளனர்.

இதுகுறித்து சென்னை விமான நிலைய அதிகாரிகள் கூறும்போது, இந்த போலி மோசடி கும்பல் குறித்து போலீசிலும் புகார் தெரிவித்து உள்ளோம் என்றனர்.

# கொடைக்கானலில் பூத்து குலுங்கும் சிலுவை பூக்கள்



கொடைக்கானல், டிச.25

கிறிஸ்துமஸ் பண்டிகை உலகம் முழுவதும் நாளை மறுநாள் உற்சாகமாக கொண்டாடப்பட உள்ளது. இதனை முன்னிட்டு பல்வேறு கிறிஸ்தவ ஆலயங்கள், வீடுகளில் கிறிஸ்துமஸ் குடில்கள், நட்சத்திர மின் விளக்குகள் அலங்கரித்து வைத்துள்ளனர்.

மேலும்சாண்டாகிளாஸ் வேடம் அணிந்த கிறிஸ்தவர்கள் இரவு நேரங்களில் கிறிஸ்தவர்களின் வீடுகளுக்கு சென்று பரிசு பொருட்களை வழங்கி பிரார்த்தனை செய்து வருகின்றனர். இந்நிலையில் கொடைக்கானல் நகர் பகுதியில் சிலுவை வடிவிலான பூக்கள் பூத்து குலுங்குவது சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது. வழக்கமாக டிசம்பர் மாதத்தில் மட்டுமே இந்த வகை பூக்கள் பூக்கும். தற்போது கிறிஸ்துமஸ் பண்டிகை, புத்தாண்டு கொண்டாட உள்ள நிலையில் சிலுவை பூக்கள் கொடைக்கானலில் பூத்து குலுங்குவது அதனை வரவேற்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்த பூக்களின் அருகே நின்று சிறுவர்கள் மற்றும் சுற்றுலாபயணிகள்புகைப்படம் மற்றும் செல்பி எடுத்து மகிழ்ந்து வருகின்றனர்.

# மஹாசிவராத்திரியை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் ஆதியோகி ரத யாத்திரை



கோவை, டிச.25

மஹாசிவராத்திரியை முன்னிட்டு தென் கயிலாய பக்தி பேரவை சார்பில் நடத்தப்படும் ஆதியோகி ரத யாத்திரை இந்தாண்டு 30,000 கி.மீ பயணிக்க உள்ளது.

இதையொட்டி, கோவை ஆதியோகி முன்பு நேற்று (டிசம்பர் 22) நடைபெற்ற விழாவில் தமிழ்நாட்டின் வடக்கு மற்றும் மேற்கு திசைகளில் பயணிக்க உள்ள ஆதியோகி ரத யாத்திரையை தவத்திரு பேரூர் ஆதீனம் மருதாசல அடிகளாரும், தவத்திரு சிரவை ஆதீனம் குமரகுருபர சுவாமிகளும் ஆரத்திஎடுத்துதொடங்கி வைத்தனர்.

ஈஷாவில் நடைபெறும் மஹாசிவராத்திரி விழாவில் பங்கேற்க அழைப்பு விடுக்கும் விதமாகவும், கோவைக்கு வந்து ஆதியோகியை நேரில் தரிசிக்க முடியாதவர்கள் அவர்களுடைய ஊர்களிலேயே ஆதியோகியை தரிசனம் செய்வதற்காகவும் இந்த ரத யாத்திரை ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

அந்த வகையில் இந்தாண்டு ஆதியோகி திருமேனியுடன்கூடிய 4 ரதங்கள்தமிழ்நாட்டின்நான்கு திசைகளில் பயணிக்க உள்ளன. மஹாசிவராத்திரி வரையிலான 2 மாத காலத்தில் இந்த ரதங்கள் 1,000க்கும் மேற்பட்ட கிராமங்கள் வழியாக சுமார் 30,000 கி.மீ பயணிக்க உள்ளன.

இதன் தொடக்க விழாவில் பங்கேற்ற பேரூர் ஆதீனம் அவர்கள் நிகழ்வில் பேசுகையில், "மாதந்தோறும் சிவராத்திரி வந்தாலும் மாசி மாதம் வரும் மஹா சிவராத்திரையை மிகவும் சிறப்பாக கொண்டாடுகிறோம். இவ்விழா நம் திருக்கோயில்களில் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதை மக்களின் விழாவாக, மக்களின் வழிபாட்டு நிகழ்வாக மாற்றிய பெருமை ஈஷா யோக மையத்தையே சாரும்.

ஈஷாவில் நடக்கும் மஹாசிவராத்திரி விழாவில் தமிழ்நாடு மட்டுமின்றி,

இந்தியா மட்டுமின்றி உலகெங்கும் இருந்து பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள். இவ்விழாவில் கலந்து கொள்ள மக்களுக்கு அழைப்பு விடுக்கும் விதமாக ஆதியோகி ரதங்கள் இங்கிருந்து புறப்பட்டு கிராமங்கள் மற்றும் நகரங்கள்தோறும் பயணிக்க உள்ளன.

கோவில்களில் மூலவர் இருப்பதை போல் ஆதியோகி இங்கு இருந்து கொண்டு அருள் பாலிக்கிறார். இந்த ரதங்களில் உள்ள ஆதியோகி திருமேனிகள் உற்சவ மூர்த்திகளை போல் ஊர்தோறும் பயணித்து பக்தர்களுக்கு அருள்பாலிகின்றனர். அதன் நல்ல தொடக்க விழா இன்று தொடங்குகிறது.

ஈஷா மையத்தின் பணிகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டே வருகிறது. ஈஷாவின் சமயப் பணிகளும் சமுதாயப் பணிகளும் மேலும் சிறந்த விளங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்" என்றார்.

இதற்கு முன்னதாக, கிழக்கு மற்றும் தெற்கு திசை நோக்கி செல்லும் ரத யாத்திரையை தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தொடங்கி வைத்தது குறிப்பிடத்தக்கது.

# விளம்பர மாடல் ஆட்சியில், எந்தத் துறையும் பணிகளைச் சரிவர மேற்கொள்வதில்லை: அண்ணாமலை தாக்கு



சென்னை, டிச.25

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

கடந்த 19.12.2024 அன்று, பள்ளிக்கல்வித்துறையின் தொழிற்கல்வி இணை இயக்குநர், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் எழுதிய கடிதத்தில், BSNL நிறுவனத்திற்குச் செலுத்தப்படவேண்டிய நிலுவைத் தொகையான 1.5 கோடி ரூபாயை உடனடியாக செலுத்துங்கள் என்றும், இல்லையெனில் சேவை துண்டிக்கப்படும் என்று BSNL நிறுவனம் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர், இன்றைய பத்திரிகையாளர் சந்திப்பில், BSNL நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை எதுவும் இல்லை என்று மீண்டும் பொய் சொல்லியிருக்கிறார்.

அப்படியானால், பள்ளிக்கல்வித்துறையின் தொழிற்கல்வி இணை இயக்குநர் பொய் சொல்கிறார் என்கிறாரா அமைச்சர்?

சாதாரண நிகழ்வுகளைக் கூட, சாதனைகள்போலக் காட்டிக் கொள்ளும் விளம்பர மாடல் ஆட்சியில், எந்தத் துறையும் தங்களுக்கான பணிகளைச் சரிவர மேற்கொள்வதில்லை.எனவே, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர், வறட்டு கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக மீண்டும் மீண்டும் பொய் சொல்வதை நிறுத்திவிட்டு, மாணவர்களின் கல்வியோடு விளையாடாமல் இணைய இணைப்புக்கான நிலுவைத் தொகையை உடனடியாகச் செலுத்த வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அவர்கூறியுள்ளார்.

# சித்தேரி மலை சாலையில் மீண்டும் மண் சரிவு பேருந்துகள் நிறுத்தப்பட்டதால் பொதுமக்கள் அவதி



அரூர், டிச.25

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், சித்தேரி மற்றும் அதன்சுற்றுவட்டாரமலை கிராமங்களில் நேற்று அதிகாலை சுமார் 3 மணி நேரத்திற்கு மேலாக கனமழை வெளுத்து வாங்கியது.

இதன் காரணமாக மலைகளில் ஆங்காங்கே சிறு சிறு அருவிகள் உருவாகி சாலையில் பெருக்கெடுத்து ஓடிய மழை நீரின் காரணமாக சித்தேரி கிராமத்திற்கு செல்லும் சாலையில், சூரியக்கடை பிரிவு சாலை அருகே மூன்றாவது முறையாக மண் சரிவு ஏற்பட்டு சூரியக்கடை சித்தேரி பேரேருபுதூர் மற்றும் அதன்சுற்றியுள்ள 63 மலை கிராமங்களுக்கான போக்குவரத்து முற்றிலுமாக துண்டிக்கப்பட்டது.

இதன் காரணமாக இவ்வழியாக கார் மற்றும் பேருந்துகள் இயக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டு சக்கர வாகனங்கள் மட்டுமே செல்ல தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக கர்ப்பிணி பெண்கள், பொதுமக்கள், முதியோர்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

மேலும் சேதமான மண் சரிவை சீரமைத்து போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திண்டிவனம் அருகே தண்டவாளத்தில் திடீர் விரிசல்: நடுவழியில் ரெயில் நிறுத்தம் பயணிகள் அவதி



திண்டிவனம், டிச.25

சென்னை எழும்பூரிலிருந்து இன்று காலை 6மணிக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு பாண்டிச்சேரி ரெயில் திண்டிவனம் நோக்கி வந்து கொண்டிருந்தது.

திண்டிவனம் அருகே உள்ள ஓங்கூர் தண்டவாளத்தில் திடீரென அதிகப்படியான சத்தம் கேட்டதால் என்ஜின் டிரைவர் உடனடியாக ரெயிலை நிறுத்தினார். இது குறித்து ரெயில்வே கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து ரெயில்வே ஊழியர்கள் வந்து பார்த்தபோது தண்டவாளத்தில் விரிசல் ஏற்பட்டிருந்தது தெரிய வந்தது.

இதையடுத்து பாண்டிச்சேரி ரெயில் அங்கேயே நிறுத்தப்பட்டது.

ஒரு மணி நேரத்திற்கு மேலாக தண்டவாளத்தில் ரெயில்நிறுத்தப்பட்டதால் பயணிகள் கடும் அவதி அடைந்தனர். மேலும் பயணிகள் உரிய நேரத்திற்கும் செல்ல முடியாமல் கடும் அவதியடைந்து வந்தனர்.

தண்டவாளத்தை சீரமைக்கும் பணியில் ரெயில்வே ஊழியர்கள் ஈடுபட்டனர். ஒரு மணி நேரத்திற்கு மேலாக போராடி தண்டவாளத்தை ரெயில்வே ஊழியர்கள் சரி செய்த பின் திண்டிவம் நோக்கி ரெயில் வந்து கொண்டிருக்கிறது. என்ஜின் டிரைவர் உடனடியாக தகவல் தெரிவித்ததால்பெரும்அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

# மாணவர்கள் இனி திருவள்ளுவர் படத்தை காவி நிறத்தில் வரைய அரசு தடை



சென்னை, டிச.25

கன்னியாகுமரி கடலில் உள்ள இரண்டு பாறைகளில் ஒரு பாறையில் விவேகானந்தர் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. மற்றொரு பாறையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

1.1.2000ம் ஆண்டு அப்போதைய முதலமைச்சராக இருந்த கருணாநிதி அந்த திருவள்ளுவர் சிலையை திறந்து வைத்தார். இந்த சிலை தமிழகத்தின் சுற்றுலா தலங்களில் தனித்துவமான சிறப்பை பெற்று உள்ளது.

கன்னியாகுமரி கடல் பாறையில் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு தற்போது 25 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. இதையொட்டி தமிழக அரசு சார்பில் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

தமிழ்நாடு முழுவதும் அரசு சார்பில் திருவள்ளுவர் தொடர்பான கண்காட்சிகள் இன்று முதல் நடத்தப்பட்டு வருகின்றன.

திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவை முன்னிட்டு கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலையை புதுப்பிக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

மேலும் திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் நினைவு மண்டபத்தையும் இணைக்கும் வகையில் ரூ.37 கோடி செலவில் 97 மீட்டர் நீளம் 4 மீட்டர் அகலம் உள்ள கண்ணாடி கூண்டு பாலம் அமைக்கப்பட்டு வருகிறது.

தற்போது அந்த பாலம் பணிகள் நிறைவு பெறும் நிலையில் உள்ளன. அந்த கண்ணாடி கூண்டு பாலத்தை வருகிற 30ந் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளார். மேலும் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கிறார்.

இதையொட்டி தமிழகத்தின் பல பகுதிகளிலும் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாகளைகட்டி உள்ளது. சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள நூலகத்தில் அரசு சார்பில் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

அந்த கண்காட்சியில் திருவள்ளுவரின் சிறப்பை தெரிவிக்கும் வகையில் பல்வேறு அம்சங்கள் இடம் பெற்று இருந்தன. மாணவ மாணவிகள் வரைந்த திருவள்ளுவரின் பல்வேறு வகையான படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டு இருந்தது. அதில் ஒரு மாணவர் வரைந்த படம் திடீரென சர்ச்சையை ஏற்படுத்தியது.

அந்த திருவள்ளுவர் படத்தை அந்த மாணவர் காவிஉடையுடன்வரைந்து இருந்தார். திருவள்ளுவர் படத்துக்கு காவி நிறம் பூசப்பட்டு இருப்பது சரியானது அல்ல என்று கண்காட்சிக்கு வந்திருந்த பலரும் விமர்சித்தனர்.

கடந்த ஆண்டு காவி உடையுடன் கூடிய திருவள்ளுவர் படத்தை கவர்னர் ஆர்.என்.ரவி பயன்படுத்தியது மிகப்பெரிய சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது. கவர்னருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில் அதே போன்று காவி உடையில் திருவள்ளுவர் படம் இருந்ததால் கண்காட்சியில் சற்று சர்ச்சை எழுந்தது. இதையடுத்து அந்த திருவள்ளுவர் படம் கண்காட்சி அரங்கில் இருந்து உடனடியாக அகற்றப்பட்டது.

இது தொடர்பாக அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிருபர்களிடம் கூறியதாவது:

ஐயன் திருவள்ளுவர் சிலை 25 ஆண்டுகளுக்கு முன் கன்னியாகுமரியில் கலைஞரால் 2000ம் ஆண்டு ஜனவரி 1ந்தேதி வைக்கப்பட்டது.

25 ஆண்டுகள் நிறைவடைந்து வெள்ளி விழா கொண்டாட்டமாக மட்டுமின்றி நம் பள்ளி பிள்ளைகளுக்கு ஓவியப் போட்டியாக இருந்தாலும் சரி, அதை சார்ந்துள்ள பல்வேறு ஒப்புவிப்பு போட்டியாக இருந்தாலும் இது போன்ற போட்டிகளை நடத்தி, பரிசுகள் வழங்க வேண்டும் என்று சொல்லி இருந்தார்.

அது மட்டுமின்றி ஒவ்வொரு மாவட்ட நூலகங்களிலும் இது போன்று வள்ளுவர் புத்தக கண்காட்சி ஓவிய கண்காட்சியாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு நூலகத்திலும் அந்தந்த மாவட்ட கலெக்டர் மூலமாக வள்ளுவர் புகைப்படம் வைக்கப்பட்டு மாலை மரியாதை செலுத்தும் நிகழ்வும் நடைபெறுகிறது.

திருவள்ளுவருக்கு மரியாதை என்று சொல்கிற போது அனைவருக்கும் பொதுமறையான ஒன்று. அந்த விதத்தில் பெருமை கொள்கின்ற ஒரு நிகழ்வாக அமைந்துள்ளது.

மாணவ மாணவிகள் ஒவ்வொருவரையும்தனித்திறமையை வளர்த்தெடுக்கும் விதமாக தேர்ந்தெடுத்து பல்வேறு போட்டிகளைநடத்தி வருகிறோம்.

இதில் தேர்வு செய்யப்படு கிற மாணவ செல்வங்களை வெளிநாடுகளுக்கு அழைத்து செல்வதை ஒவ்வொரு ஆண்டும் செய்து வருகிறோம்.

கேள்வி: பள்ளிக் கல்வி துறைக்கு ஒன்றிய அரசிடம் இருந்து நிதி வரவேண்டியது இன்னும் வராமல் இருக்கிறதே. நிதி பற்றி பேச மறுப்பதற்கு என்ன காரணம்?

பதில்: நிதி பற்றி பேச ஒன்றிய அரசுதான் மறுக்கிறார்கள். சம்பளத்துக்கும் இண்டர்நெட்டுக்கும் சம்பந்தம் இல்லை. ஆனால் இண்டர்நெட்டுக்கு பாக்கி வைக்க வேண்டிய அவசியம் இல்லை. எங்களுக்கும் அவர்களுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளது. ஒரு அரசாங்கம் நிலுவை வைக்குமா?

கேள்வி: மும்மொழி கல்விக் கொள்கையை ஏற்காததால்தான் மத்திய அரசு நிதியை நிறுத்தி வைத்திருக்கிறார்களா?

பதில்: இதுபற்றி மத்திய மந்திரி கூறும்போது அது மாதிரிதான் சொல்கிறார். அதனால்தான் கல்வியை மாநில பட்டியலுக்கு கொண்டு வர வேண்டும் என்று சொல்கிறோம்.

கேள்வி: திருவள்ளுவர் ஓவியத்தை காவி நிறத்தில் வரைந்து வைத்திருந்தது குறித்து?

பதில்: ஓவியம் வரைந்த அந்த பிள்ளையிடம் சொல்லி விட்டோம். இம் மாதிரி வரையக் கூடாது என்று சொல்லி உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# நடிகர் விஜய் பாசிசத்துக்கும், பாயாசத்துக்கும் வித்தியாசம் தெரியாதவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு




கோவை, டிச.25

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் 24வது கோவை மாவட்ட மாநாடு கோவை வரதராஜபுரம் பகுதியில் தொடங்கியது.

மாநாட்டுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் அரசியல் தலைமை குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். தொடக்க நிகழ்ச்சியாக கோவையின் வரலாற்றை விளக்கும் வகையில் புகைப்பட கண்காட்சியை அந்த கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் குணசேகரன் திறந்து வைத்தார்.

பின்னர் பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட நினைவு ஜோதிகளை அக்கட்சி நிர்வாகிகள் பெற்றுக் கொண்டனர்.

இதையடுத்து முன்னாள் எம்.பி. பி.ஆர். நடராஜன், கட்சிக்கொடியை ஏற்றி வைத்தார். மாநாட்டில் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் உ.வாசுகி கலந்து கொண்டு பேசியதாவது:

இந்தியாவில் 3வது முறையாக ஆட்சிக்கு வந்துள்ள பா.ஜ.க. தனது சொந்த காலில் நிற்க முடியாமல் பிற கூட்டணி கட்சிகளை சார்ந்து தான் ஆட்சியமைக்க முடியும் என்ற நிலைவந்துள்ளது.

பா.ஜ.க. அரசு பெரு நிறுவனங்களுக்கு ஆதரவாகவும், வகுப்புவாத கொள்கையை கடைபிடிக்கும் அரசாகவும் உள்ளது. பல இடங்களில் சிறுபான்மையின மக்கள் குறிவைத்து தாக்கப்படுகிறார்கள்.

ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது ஜனநாயக விரோதமானது. மாநில உரிமைகளுக்கு எதிரானது. டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கக் கூடாது என தமிழ்நாடு அரசு சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி இருப்பது வரவேற்கத்தக்கது.

பாசிசத்துக்கும், பாயாசத்துக்கும் வித்தியாசம் தெரியாத தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், ஆட்சியை பிடித்தால் என்ன செய்வார் என நினைத்து பார்க்கவே பயமாக இருக்கிறது. ஒரு கம்பெனிக்கு வொர்க்பிரம் ஹோம் பண்ணலாம். அரசியலில் வீட்டில் இருந்து வேலை செய்ய முடியாது.

இவ்வாறு அவர் கூறினார். இதைத்தொடர்ந்து உழைப்பாளர் பேரணியும், மசக்காளிபாளையத்தில் பொதுக்கூட்டமும் நடந்தது.

# திண்டிவனம் அருகே சென்டர் மீடியனில் வேன் மோதி 15 பக்தர்கள் படுகாயம்



திண்டிவனம், டிச.25

சென்னை பொன்னேரியில் இருந்து 28 பக்தர்களை ஏற்றிக்கொண்டு வேன் ஒன்று திருச்செந்தூர் முருகன் கோவில் மற்றும் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் உள்ளிட்ட பல்வேறு கோவில்களுக்கு சென்று சாமி தரிசனம் செய்து விட்டு மீண்டும் பொன்னேரி நோக்கி சென்று கொண்டிருந்தனர். இந்த வேனை பொன்னேரியைச் சேர்ந்த குமார் என்பவர் ஓட்டி வந்தார்.

இந்தவேன்திண்டிவனம் அடுத்த ஒலக்கூர் அருகே சென்று கொண்டிருக்கும் போது, முன்னாள் சென்ற அரசு பஸ் மீது மோதாமல் இருப்பதற்காக திடீரென்று வேன் டிரைவர் எதிர்பாராத விதமாக பிரேக் அடித்ததால் தனியார் பஸ் மீது வேன் மோதியதாக கூறப்படுகிறது.

இந்த விபத்தில் வேன் சென்டர் மீடியனில் மோதியதில் 15க்கும் மேற்பட்ட பக்தர்கள் காயம் அடைந்தனர். இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த ஒலக்கூர் போலீசார் விபத்தில் காயம் அடைந்தவர்களை மீட்டு திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததுடன்,

இந்த விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர். பல்வேறு கோவில்களுக்கு சென்று சாமி தரிசனம் செய்துவிட்டு வீடு திரும்பிய பக்தர்கள் சென்ற வேன் விபத்தில் சிக்கி 15க்கும் மேற்பட்ட பக்தர்கள் காயம் அடைந்த சம்பவம் இப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# டங்ஸ்டன் திட்ட ஒப்பந்தம் ரத்து என மத்திய அரசு அறிவிக்கும் வரை போராட வேண்டும் சு.வெங்கடேசன்

மதுரை, டிச.25

மதுரை மாவட்டம் மேலூர் அருகே அரிட்டாபட்டி பகுதியில் டங்ஸ்டன் கனிம சுரங்க திட்டத்தைரத்துசெய்யக்கோரி இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சார்பில் 3 நாட்கள் நடைபயண நிறைவு நிகழ்ச்சி பொதுக்கூட்டம் மேலூர் பஸ் நிலையம் முன்பு நடைபெற்றது. இந்த பொதுக்கூட்டத்தில் மதுரை பாராளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் கலந்துகொண்டு பேசினார். டங்ஸ்டன் தொடர்பாக பாராளுமன்றத்தில், சட்ட மன்றத்தில் பேசலாம். ஆனால் சம்பந்தப்பட்ட ஊர்களில் பேசினால் தான் டங்ஸ்டன் திட்டம் ரத்தாகும். டங்ஸ்டன்குறித்தமுழுவிவரமும் மேலூரின் ஒவ்வொரு கிராமத்தின ருக்கு தெரிந்தால் தான் திட்டம் ரத்தாகும். டங்ஸ்டன் குறித்து நமக்காக சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர், அதிகாரிகள்பேசுவார்கள்என்பதைவிட நமக்காக நாம் பேசினால் தான் அரசு செவிமடுக்கும்.

வேதாந்தாநிறுவனத்தார் அவ்வளவு எளிதில் டங்ஸ்டன் திட்டத்தை விட்டு விட்டு போக மாட்டார்கள். இத்திட்டத்தை நிறைவேற்ற முயற்சி எடுப்பார்கள். டங்ஸ்டன் பிரச்சனையில் நமக்கு மிகப்பெரிய நம்பிக்கை சட்டமன்ற தீர்மானம். இவ்வளவு நடந்த பிறகும் ஒன்றிய அரசு இப்போது வரை டங்ஸ்டன் தொடர்பாக வாய் திறக்கவில்லை.

மத்திய அமைச்சரிடம் பேசும்போது, டங்ஸ்டன் சுரங்க ஏலத்தை ரத்து செய்வதில் என்ன பிரச்சனை உள்ளது எனக்கேட்டேன். அதற்கு மத்திய மந்திரி மொத்தம் 5,000 ஏக்கரில் அரிட்டாபட்டி பாரம்பரிய சின்னங்கள் வெறும் 500 ஏக்கர் தான், மீதமுள்ள 4,500 ஏக்கரில் திட்டத்தை நிறைவேற்றினால் உங்களுக்கு என்ன பிரச்சனை என கேட்கிறார்.

மத்திய அரசு டங்ஸ்டன் திட்டத்தை நிறைவேற்றுவதில் உறுதியாக உள்ளார்கள். டங்ஸ்டன் ஏல உத்தரவு ரத்து என மத்திய அரசு அவ்வளவு எளிதாக அறிவிக்க மாட்டார்கள். நம் எதிர்ப்பு நடவடிக்கைகள் போதாது. போராட்டம் அடுத்தகட்டத்திற்கு நகர்ந்தால் மட்டுமே டங்ஸ்டன் திட்டம் ரத்தாகும்.

பாராளுமன்றத்திற்குள் அதானி என்ற பெயரை கூற முடியவில்லை. அதானி என பேசினால் மைக் ஆப் செய்யப்படுகிறது. பெரு முதலாளிகளின் அரசியலை புரிந்து கொள்ள வேண்டும். நமக்கு வந்திருப்பது சாதாரண ஆபத்து அல்ல. மேலூர் மக்கள் பெருமுதலாளிகளின் அரசியலை புரிந்து கொள்ள வேண்டும். மேலூர் போராட்டம் இந்தியளவில் கவனம் பெற்றுள்ளது. இந்தியா முழுவதும் மேலூரின் சத்தம் கேட்டுக்கொண்டு உள்ளது. கூடங்குளம், மீத்தேன், ஸ்டெர்லைட் போன்று மதுரை மேலூர் ஆகிவிடக்கூடாது. தூத்துக்குடி ஸ்டெர்லைட் விவகாரத்தில் 14 பேர் சுடப்பட்டார்கள். அங்கெல்லாம் ஜனநாயக சக்திகள் கோட்டை விட்டு விட்டார்கள். கவனக்குறைவாக இருந்து விட்டார்கள். மேலூரை எந்த தலைவர்களும் காப்பாற்ற மாட்டார்கள்.

மக்கள், தலைவர்களை நம்ப வேண்டாம். மக்களே விழிப்புணர்வு பெற்று போராடுங்கள். டங்ஸ்டன் ஏலம் ஒப்பந்த அறிவிப்பு ரத்து என்பதை அறிவிக்கிறவரைபோராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இந்த நாட்டின் அரசமைப்பு சட்டம், ஒன்றிய அரசு என எல்லாமே வேதாந்தா நிறுவனத்திற்கு ஆதரவாக உள்ளது. ஆனால் மக்கள் சக்தி வேதாந்தா நிறுவனத்திற்கு எதிராக உள்ளது.

ஒரு கேடயம் போல சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றிய முதல்வருக்கு நன்றி. ஒப்பந்தம் ரத்து என மத்திய அரசு அறிவிக்கும் வரை போராட்டத்தை தொடர்ந்து நடத்தவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# கேரளாவில் இருந்து கழிவு பொருட்கள் ஏற்றி வந்த வாகனங்கள் பறிமுதல் 2 டிரைவர்கள் கைது




களியக்காவிளை, டிச.25

தமிழககேரளா எல்லைப் பகுதியான குமரி மாவட்டம் களியக்காவிளை வழியாக தினமும் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் தமிழகத்தில் இருந்து கேரள மாநிலத்திற்கும், கேரளாவில் இருந்து தமிழகத்திற்கும் சென்று வருகின்றன.

கேரளாவில் இருந்து தமிழகத்திற்கு வரும் காலியான சரக்கு வாகன டிரைவர்கள் பணத்திற்கு ஆசைப்பட்டு அந்த மாநிலத்தில் இருந்து புழுக்கள் நெளியும் மீன், கோழி உள்ளிட்ட பல்வேறு கழிவுகளை ஏற்றி வந்து தமிழகத்திற்குள் கொட்டி செல்லும் நிலை கடந்த சில மாதங்களாக அதிகரித்து வருகிறது.

அதனை கட்டுப்படுத்த அனைத்து சோதனைசாவடிகளிலும் கண்காணிப்பை பலப்படுத்த வேண்டும் என்று மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுந்தரவதனம் உத்தரவு பிறப்பித்திருந்தார். இதனைத்தொடர்ந்து அனைத்து சோதனைசாவடிகளிலும் தீவிர சோதனை நடந்து வருகிறது.

இந்நிலையில் இன்று அதிகாலை களியக்காவிளை போலீஸ் இன்ஸ்பெக்டர் பாலமுருகன் தலைமையில் போலீசார் களியக்காவிளை பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கேரளாவில் இருந்து ஒரு மினி டெம்போ மற்றும் செப்டிக் டேங்க் கழிவுகள் கொண்டு செல்லும் (மனித கழிவு) வாகனம் வேகமாக வந்தது.

அந்த வாகனங்களில் இருந்து கடும் துர்நாற்றம் வீசியது. இதனால் சந்தேகமடைந்தபோலீசார்அதனை மடக்கி பிடித்தனர். பின்னர் அந்த வாகனங்களை சோதனை செய்தபோது அதில் ஒரு வாகனத்தில் கோழி கழிவுகளும், மற்றொரு வாகனத்தில் செப்டிக் டேங்க் கழிவுகள் இருந்தது ம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து அந்த வாகனங்களின் டிரைவர்களிடம் போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர்கள் தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தை சேர்ந்த மணிகண்ட தேவா மற்றும் நெல்லை மாவட்டத்தை சேர்ந்த வள்ளி முருகன் என்பது தெரியவந்தது. இந்த கோழி மற்றும் செப்டிக் டேங்க் கழிவுகளை கேரள மாநிலத்தில் இருந்து எடுத்து நெல்லை மாவட்டத்தில் கொட்ட கொண்டு சென்றது தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து அந்த வாகனங்களை பறிமுதல் செய்த போலீசார், டிரைவர்களை போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை நடத்தினர். பின்னர் இரு வாகனங்களின் டிரைவர்கள் 2 பேர் மீதும், வாகனங்கள் மீதும் வழக்குப்பதிவு செய்தனர். மேலும் வாகனங்களின் உரிமையாளர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் கேரளாவில் இருந்து குமரிக்கு மறைமுகமாக வாகனங்களில் தொடர்ச்சியாக கழிவுகள் வந்த வண்ணம் இருப்பதால் குமரி மாவட்டம் குப்பை கூடமாக மாறிவிட வாய்ப்புள்ளது. எனவே இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக கேரளாவில் இருந்து கோழி உள்ளிட்ட கழிவு பொருட்களை குமரி மாவட்டத்திற்குள் கொண்டு வந்து கைதானவர்கள் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என குமரி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுந்தரவதனம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நெல்லை மாவட்டம் சுத்தமல்லி அருகே கடந்த சில நாட்களுக்கு முன்பு டன் கணக்கில் கேரளா மருத்துவ கழிவுகள் கொட்டப்பட்டன. இதனை உடனடியாக கேரளா அதிகாரிகள் அகற்ற வேண்டும் என பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டது. இதையடுத்துஅங்கு கேரளா அதிகாரிகள் மருத்துவ கழிவுகளை கேரளாவுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் இன்று கேரளா கழிவு பொருட்களை ஏற்றி கொண்டு குமரி மாவட்டத்தில் கொட்ட வந்த 2 வாகனங்கள் சிக்கிய சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## ஊட்டியில் கொட்டும் உறைபனியால் கடும் குளிர்: மக்கள் அவதி

ஊட்டி, டிச.25

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் ஆண்டுதோறும் நவம்பர் மாதம் முதல் பிப்ரவரி வரை பனிக்காலம் நிலவும். ஆரம்பத்தில் நீர்ப்பனி பொழிவும், அதன் தொடர்ச்சியாக உறைபனியும் காணப்படும்.

ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, மஞ்சூர் உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளில் கடும் உறைபனி காணப்படும். ஆனால் பருவமழை தாமதமாக தொடங்கியதால் பனிக்காலமும் தாமதமாகவே தொடங்கியது.

தற்போது மழை குறைந்துள்ளதால் பனிப்பொழிவின் தாக்கமும் அதிகரித்துள்ளது. காலை முதல் மாலை வரை நன்றாக வெயிலும் இரவு முதல் அதிகாலை வரை கடும் குளிரும் நிலவுகிறது.

குறிப்பாக உறைபனியின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது. கடும் உறைபனியால் ஊட்டி தாவரவியல் பூங்கா புல் மைதானம் வெள்ளை கம்பளம் விரித்தாற் போல உறைபனி படர்ந்து இருந்தது.

ஊட்டி எச்.ஏ.டி.பி., மைதானம், ரேஸ்கோர்ஸ் மைதானம், காந்தல் கால்பந்து மைதானத்திலும் உறை பனி படிந்திருந்தது.

இது தவிர சூட்டிங்மட்டம், கோரகுந்தா, அவலாஞ்சி உள்ளிட்ட பகுதிகளில் உறைபனியின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. சாலையோரம் மற்றும் வீட்டின் வெளியே நிறுத்தப்பட்டிருந்த கார், மோட்டார் சைக்கிள், வேன், வாகனங்களின் மீது உறைபனி காணப்பட்டது.

உறைபனியுடன் கடும் குளிரும் நிலவியது. குளிரில் இருந்து தப்பிக்க மக்கள், வாகன டிரைவர்கள், வீடுகள் மற்றும் ஆங்காங்கே நெருப்பு மூட்டி குளிர் காய்ந்து வருகிறார்கள். தேயிலை தோட்ட தொழிலாளர்கள் சுவர்ட்டர்அணிந்தபடி தோட்டங்களில் தங்கள் பணியில் ஈடுபட்டனர்.

அதிகாலையில் வேலைக்கு செல்வோர் மற்றும் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவிகள் ஸ்வெட்டர் அணிந்தபடி சென்றதையும் காண முடிந்தது.

ஊட்டியில் பனிப்பொழிவு அதிகரித்துள்ள நிலையில், தொட்டிகளில் வைக்கப்பட்டுள்ள மலர் செடிகள்கருகாமல்இருக்க கோத்தகிரி மிலார் செடிகள் கொண்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா தாழ்வான பகுதியில் உள்ளதால், இங்கு பனியின் தாக்கம் எப்போதும் சற்று அதிகமாக காணப்படும். இதனால் தற்போது மலர் தொட்டிகளில் நடவு செய்யப்பட்டுள்ள சால்வியா உட்பட பல்வேறு மலர் நாற்றுக்கள் கருகும் நிலை உருவாகியுள்ளது.

எனவே, இந்த மலர் செடிகள்கருகாமல்இருக்க கோத்தகிரி மிலார் செடிகள் கொண்டு மறைக்கும் பணியில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பூங்காவில் உள்ள புல் மைதானங்களும் கருகாமல் இருப்பதற்கு தண்ணீர் பாய்ச்சும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தென்னையில் நோய் தாக்குதல் எதிரொலி: பொள்ளாச்சி இளநீர் ஏற்றுமதி திடீர் சரிவு



பொள்ளாச்சி, டிச.25

கோவை மாவட்டத்தில் ஆனைமலை, பொள்ளாச்சி, கிணத்துக்கடவு ஆகிய 3 தாலுகாக்களில் சுமார் 60 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தென்னை விவசாயம் நடைபெற்று வருகிறது.

இந்த பகுதிகளில் அறுவடை செய்யப்படும் இளநீர் தினமும் மதுரை, சென்னை உள்ளிட்ட வெளி மாவட்டங்களுக்கும், உத்திரபிரதேசம், அசாம், அரியானா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய வெளிமாநிலங்களுக்கும் லாரிகள் மூலம் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன.

பொள்ளாச்சியில் இருந்து அனுப்பப்படும் பச்சை மற்றும் சிவப்பு நிற இளநீர்களுக்கு பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பு உள்ளது. இதன்காரணமாக கடந்தாண்டு டிசம்பர் மாதத்தில் 4 லட்சம் இளநீர் விற்பனைக்காக ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் தற்போது சுமார் 3 லட்சம் இளநீர் மட்டுமே விற்பனைக்கு அனுப்பப்பட்டு உள்ளது. இதுகுறித்து பொள்ளாச்சி இளநீர் விவசாயிகள் கூறியதாவது:

தென்னை விவசாயத்தில் தற்போது நோய் தாக்குதல் அதிகரித்து காணப்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட இளநீர் காய்களின் மேற்பகுதி சற்று வித்தியாசமாக இருக்கும். ஆனால் அவற்றின் அளவோ, தரமோ குறைவதில்லை. இருந்தபோதிலும் இளநீர் காயின் தோற்றத்தை வைத்து வியாபாரிகள் விலை குறைவாக கொள்முதல் செய்கின்றனர். மேலும் வேர்வாடல், வெள்ளை ஈ தாக்குதல், சிலந்தி பூச்சி தாக்குதல் உள்பட பல்வேறு காரணங்களால் தென்னை சாகுபடி பாதிக்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக வெளிச்சந்தையில் இளநீர் குறைந்த விலைக்கு விற்பனை ஆகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

இதற்கிடையே ஆனைமலை இளநீர் உற்பத்தியாளர்கள் சங்க தலைமை ஒருங்கிணைப்பாளர் சீனிவாசன் கூறியதாவது:

வட மாநிலங்களில் மிகவும் குளிர்ந்த காலநிலை நிலவுவதால் அங்கு தற்போது இளநீரின் தேவை குறைந்து உள்ளது. அதேநேரத்தில் தமிழகத்தில் இளநீருக்கு தேவை இருப்பதால் அவற்றின் விலையில் மாற்றம் இல்லை. இதன்காரணமாக நல்ல தரமான குட்டை, நெட்டை வீரிய ஒட்டுரக மரங்களின் இளநீர் விலை ரூ.22 ஆகவும், ஒரு டன் ரூ.8250 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## பக்கிங்காம் கால்வாயில் தவறி விழுந்த வாலிபர் உடல் மீட்பு: மேலும் 2 பேரை தேடும் பணி தீவிரம்



மரக்காணம், டிச.25

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் சந்தை தோப்பு பகுதியை சேர்ந்தவர் கணேசன். இவரது மகன்கள் லோகேஷ் (24), விக்ரம் (23), சூர்யா (23). இதில் விக்ரம், சூர்யா ஆகியோர் இரட்டையர்கள் ஆவார்கள். லோகேஷ், சூர்யா ஆகியோர் மரக்காணத்தில் உள்ள பூக்கடையிலும், விக்ரம் முட்டை கடையிலும் வேலை பார்த்து வந்தனர்.

இந்த நிலையில் அண்ணன்தம்பிகள் 3 பேர் மேலும் சிலருடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறைஎன்பதால்பொழுது போக்கிற்காக மீன் பிடிக்க மரக்காணம்திண்டிவனம் மேம்பாலம் பகுதியில் உள்ள பக்கிங்காம் கால்வாய்க்கு சென்றனர்.

அவர்கள் தூண்டில் போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். மரக்காணம் பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்த மழையால் கால்வாயில் அதிக அளவு தண்ணீர் சென்றது. அங்கு மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக லோகேஷ் கால்வாயில் தவறி விழுந்தார். இதனால் அவர் தண்ணீரில் தத்தளித்த படி கூச்சல் போட்டார்.

இதனை கண்டு அதிர்ச்சி அடைந்த தம்பிகளான விக்ரம், சூர்யா ஆகியோர் லோகேசை காப்பாற்ற கால்வாயில் குதித்தனர். ஆனால் கால்வாயில் அதிகமாக தண்ணீர் சென்றதால் 3 பேரும் இழுத்து செல்லப்பட்டனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த மரக்காணம் போலீசார், தீயணைப்பு வீரர்கள் சம்பவஇடத்துக்கு விரைந்தனர் கால்வாயில் மூழ்கிய அண்ணன், தம்பிகள் 3 பேரையும் தேடினார்கள். மீனவர்களின் பைபர் படகுகளை வரவழைத்தும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். நேற்று இரவு நேரம் ஆனதால் தேடும் பணி நிறுத்தப்பட்டது. 2வது நாளாக தேடும் பணி நடைபெற்றது.

அப்போது லோகேஷ் தண்ணீரில் மூழ்கி பலியாகி கிடந்தது தெரிய வந்தது. அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சூர்யா, விக்ரம் ஆகியோரை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. கால்வாயில் மூழ்கி பலியான லோகேஷ்உடலைபார்த்து அவரது தந்தை கணேசன் மற்றும் உறவினர்கள் கதறி அழுத சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## கடலூர், சிதம்பரம் இடையே தனியார் பஸ்கள் ஓடவில்லை: கிராம மக்கள் முற்றுகை போராட்டம்

கடலூர், டிச.25

விழுப்புரம்நாகப்பட்டினம் 4 வழிச்சாலையில் பரங்கிப்பேட்டை அருகே கொத்தட்டையில் சுங்கச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது. இந்த சுங்கச்சாவடியில் இன்று (திங்கட்கிழமை) முதல் கட்டணம் வசூல் செய்ய உள்ளதாக தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அறிவித்தது. மேலும் கட்டண விவரங்களையும் வெளியிட்டது.

இதுபற்றி அறிந்த கடலூர் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் நலச்சங்கத்தினர், சாலை பணி முழுமை பெறாமல் சுங்க கட்டணம் வசூலிக்கக்கூடாது. மேலும் கட்டண விகிதம் அதிகமாக உள்ளது. இதை குறைக்க வேண்டும் என்றுவலியுறுத்திஇன்று(திங்கட்கிழமை)சுங்கச்சாவடியை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த போவதாக அறிவித்திருந்தனர்.

இதற்கிடையில் இந்த போராட்டத்தை யொட்டி கடலூர் சிதம்பரம் இடையே தனியார் பஸ்கள் ஓடாது என்று அறிவித்துள்ளனர்.

இதுபற்றி கடலூர் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் நலச்சங்க செயலாளர் தேசிங்குராஜன் கூறுகையில், கொத்தட்டை சுங்கச்சாவடியில் 50 முறை சென்றால் ஒரு மாத கட்டணம் ரூ.14 ஆயிரத்து 90 அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வட்டார போக்குவரத்து அதிகாரி நிர்ணயித்த கால நேர அட்டவணைப்படி ஒரு நாளைக்கு 8 முதல் 10 முறை சட்டப்படி பஸ்கள் இயங்கி வருகிறது. இப்படி என்றால் 5 நாளில் ஒரு மாத கணக்கு தீர்ந்து விடும். ஆகவே இந்த கட்டணத்தை குறைக்க வலியுறுத்தி இன்று கடலூரில் இருந்து சிதம்பரத்துக்கு செல்லும் 50க்கும் மேற்பட்ட தனியார் பஸ்கள் ஓடாது.

இந்த பஸ்களை சுங்கச்சாவடியில் நிறுத்தி முற்றுகை போராட்டம் நடத்துவோம். இது தொடர்பாக சிதம்பரம் சப்கலெக்டர்அலுவலகத்தில்பேச்சுவார்த்தைக்குஅழைப்பு வந்துள்ளது. இந்த பேச்சுவார்த்தைக்கு பிறகு போராட்டத்தின் தீவிரம் குறித்து அறிவிப்போம் என்றார்.

அதன்படி இன்று காலை கடலூரில் இருந்து சிதம்பரம் செல்லும் அனைத்து தனியார் பஸ்களும் நிறுத்தப்பட்டன. இதனால் பயணிகள் பெரிதும் சிரமத்திற்குள்ளானார்கள்.

அவர்கள் அரசு சார்பில் இயக்கப்பட்ட பஸ்களில் சென்றனர். இதனால் பணிக்கு செல்ல வேண்டியவர்கள் சரியான நேரத்திற்கு செல்ல இயலாமல் தவித்தனர்.

இந்த நிலையில் தனியார் பஸ் உரிமையாளர்கள் அனைத்து பஸ்களையும் கொத்தட்டை சுங்கச்சாவடிக்கு கொண்டு வந்து முற்றுகை போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் அறிவித்து உள்ளனர்.

அதேபோல் கொத்தட்டை சுங்கச்சாவடி சுற்று வட்டார கிராம மக்களும், அனைத்து கட்சியினர், சமூகநல அமைப்பினர் திரண்டு முற்றுகை போராட்டத்தில் ஈடுபட போவதாக அறிவித்தனர்.

இதனால் அந்த பகுதியில் பெரும் பதட்டமான சூழ்நிலை நிலவியதால் அங்கு 200க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

## 2024ம் ஆண்டு வெளியான படங்களில் தங்களுக்கு பிடித்த படம் எது என்பதை பகிர்ந்த சினிமா பிரபலங்கள்



2024ம் ஆண்டு முடிவடைய இன்னுல் சில நாட்களே உள்ளன. இந்த சூழலில், இந்த ஆண்டு வெளியான படங்களில் தங்கள் மனதை கவர்ந்த படம் எது என்பதை பல்வேறு சினிமா பிரபலங்கள் பகிர்ந்துள்ளனர். அதன்படி, பேட்டி ஒன்றில், கரீனா கபூர், விக்கி கவுஷல், ராஜ்குமார் ராவ், ஷபானா ஆஸ்மி, கனி குஸ்ருதி, அன்னா பென் மற்றும் பிரதிக் காந்தி ஆகியோர் இந்த வருடத்தில் தங்களுக்குப் பிடித்த இந்தியத் திரைப்படத்தை தேர்ந்தெடுத்துள்ளனர்.

கரீனா கபூர் முதலாவது தேர்ந்தெடுத்தது, கிரண் ராவ் இயக்கி 'லாபதா லேடீஸ்'. இப்படம் இந்தியா சார்பில் ஆஸ்கர் விருதுகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டது. இருப்பினும், அது இறுதிப்பட்டியலில் இடம் பெறவில்லை.

இரண்டாவதாக 'மட்கான் எக்ஸ்பிரஸ்' படத்தை தேர்ந்தெடுத்தார். இதில், பிரதிக் காந்தி, அவினாஷ் திவாரி மற்றும் திவ்யென்னு ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்தனர். மூன்றாவது அவரே நடித்திருந்த 'பக்கிங்ஹாம் மர்டர்ஸ்' படத்தை தேர்ந்தெடுத்தார்.

விக்கி கவுஷல் முதலில் தேர்ந்தெடுத்தது இந்திய பாக்ஸ் ஆபிஸில் ரூ. 600 கோடியைத் தாண்டிய இந்திப் படமாக ஸ்ட்ரீ 2. இதில் ராஜ்குமார் ராவ், ஷ்ரத்தா கபூர் உள்ளிட்ட பலர் நடித்தனர். மற்ற இரண்டு படங்களும் தென்னிந்திய படங்கள். அதில் ஒன்று தமிழில் நித்திலன் சாமிநாதன் இயக்கத்தில் வெளியான மகாராஜா. மற்றோன்று மஞ்சுமெல் பாய்ஸ்.

ராஜ்குமார் ராவ் தமிழில் சி பிரேம் குமார் இயக்கத்தில் வெளியான 'மெய்யழகன்', பிருத்விராஜின் 'ஆடுஜீவிதம்: தி கோட் லைப்' மற்றும் 'மட்கான் எக்ஸ்பிரஸ்' ஆகிய படங்களை தேர்ந்தெடுத்தார்.

மட்கான் எக்ஸ்பிரஸ் நடிகர் பிரதிக் காந்தி, பாயல் கபாடியா இயக்கத்தில் வெளியான 'ஆல் வி இமேஜின் அஸ் லைட்', இயக்குனர் ஹன்சல் மேத்தாவின் 'தி பக்கிங்ஹாம் மர்டர்ஸ்' மற்றும் 'மகாராஜா' ஆகிய படங்களை தேர்ந்தெடுத்தார்.

சுசி தலதி இயக்கத்தில் கடந்த 18ம் தேதி அமேசான் பிரைம் வீடியோ தளத்தில் வெளியான 'கேர்ள்ஸ் வில் பி கேர்ள்ஸ்' படத்தை ஷபானா ஆஸ்மி தேர்ந்தெடுத்தார். அன்னா பென், ராகுல் சதாசிவன் இயக்கத்தில் வெளியான மலையாள திகில் படமான 'பிரம்மயுகம்' மற்றும் சுசி தலதி இயக்கிய வெளியான 'கேர்ள்ஸ் வில் பி கேர்ள்ஸ்' ஆகியவற்றை தேர்ந்தெடுத்தார்.

'தி ஆல் வி இமேஜின் அஸ் லைட்' மற்றும் 'கேர்ள்ஸ் வில் பி கேர்ள்ஸ்' நடிகை கனி குஸ்ருதி, கிறிஸ்டோ டோமி இயக்கிய மலையாளப் படமான 'உள்ளொழுக்கு', ஆனந்த் ஏகர்ஷி இயக்கிய 'ஆட்டம்' மற்றும் அடுத்த ஆண்டு வெளியாக உள்ள 'சிஸ்டர் மிட்நைட்' ஆகிய படங்களை தேர்ந்தெடுத்தார்.

## கிறிஸ்டோபர் நோலனின் 13வது படம் குறித்து வெளியாக முக்கிய தகவல்



பிரபல ஹாலிவுட் இயக்குனர்களில் ஒருவர் கிறிஸ்டோபர் நோலன். இவரது இயக்கத்தில் கடைசியாக வெளியான படம் 'ஓப்பன்ஹெய்மர்'. ஓப்பன் ஹெய்மர் கதாபாத்திரத்தில் சிலியன் மர்பி நடித்த இப்படம் 7 ஆஸ்கர் விருதுகளை அள்ளியது. இதனையடுத்து, கிறிஸ்டோபர் நோலன் தனது 13வது படத்தை இயக்கி வருகிறார்.

இப்படத்தில், மேட் டாமன், ஸ்பைடர் மேன்' பட நடிகர் டாம் ஹாலண்ட் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். சமீபத்தில், இப்படத்தில், அன்னே ஹாத்வே, ஜெண்டயா மற்றும் சார்லிஸ் தெரோன் ஆகியோர் இணைந்தனர். அன்னா ஹாத்வே இதற்கு முன்பு கடந்த 2014ம் ஆண்டு கிறிஸ்டோபர் நோலன் இயக்கத்தில் வெளியான 'இன்டர்ஸ்டெல்லர்' படத்தில் நடித்திருந்தார். இந்நிலையில், இப்படத்தின் தலைப்பு மற்றும் கதை பற்றிய முக்கிய தகவல் ஒன்று வெளியாகி உள்ளது. அதன்படி, கிறிஸ்டோபர் நோலனின் 13வது படத்திற்கு 'தி ஒடிஸி' எனப்பெயரிடப்பட்டுள்ளதாகவும், கவிஞர் ஹோமரின் காவிய கவிதையை தழுவி இப்படம் உருவாக உள்ளதாகவும் கூறப்படுகிறது. இப்படம் 2026ம் ஆண்டு ஜூலை 17ந்தேதி வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

## 'சிக்கந்தர்' படப்பிடிப்பை நிறைவு செய்த காஜல் அகர்வால்?

ஏ.ஆர்.முருகதாஸ் தற்போது பாலிவுட் நடிகர் சல்மான்கானை வைத்து 'சிக்கந்தர்' படத்தை இயக்கி வருகிறார். இப்படத்தில் சல்மான் கானுக்கு ஜோடியாக ராஷ்மிகா மந்தனா நடிக்கிறார். "புராணக் கதை' படமாக உருவாகும் இப்படத்தை பிரபல தயாரிப்பாளர் சஜித் நதியத்வாலா தயாரிக்கிறார்.

மேலும் இந்த படத்தில் காஜல் அகர்வால், சுனில் ஷெட்டி மற்றும் சத்யராஜ் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். இந்த படம் அடுத்த ஆண்டு ரம்ஜான் பண்டிகைக்கு வெளியாகும் என சல்மான்கான் தனது எக்ஸ் பக்கத்தில் முன்னதாக அறிவிப்பு வெளியிட்டிருந்தார். இந்த நிலையில் இப்படத்தின் புதிய தகவல் வெளியாகி உள்ளது

அதன்படி, இப்படத்தின் படப்பிடிப்பை காஜல் அகர்வால் நிறைவு செய்துள்ளதாக தெரிகிறது. சுமார் 24 நாட்கள் காஜல் அகர்வால்இப்படப்பிடிப்பில்ஈடுபட்டுவந்ததாககூறப்படும்நிலையில்,தற்போதுஅவரதுகாட்சிபடமாக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. மேலும், இப்படத்தின் டீசர் சல்மான் கானின் பிறந்த நாளன்று வெளியாக உள்ளதாகவும் கூறப்படுகிறது. விரைவில் இப்படத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பார்டர் கவாஸ்கர் கோப்பை: சுப்மன் கில்லுக்கு இந்திய முன்னாள் வீரர் அட்வைஸ்



ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதுவரை நடந்துள்ள 3 டெஸ்ட் முடிவில் தொடர் 11 என்ற கணக்கில் சமனில் உள்ளது. இதனையடுத்து 4வது டெஸ்ட் போட்டி மெல்போர்னில் நாளை மறுதினம் (வியாழக்கிழமை) இந்திய நேரப்படி அதிகாலை 5 மணிக்கு தொடங்குகிறது. இதையொட்டி இந்திய வீரர்கள் கடந்த 21ந்தேதியில் இருந்து அங்கு பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னதாக இந்த தொடரில் இந்தியாவின் பேட்டிங் துறையில் முன்னணி வீரர்களில் கே.எல். ராகுல் மட்டுமே நம்பிக்கை அளிக்கும் வகையில் விளையாடி வருகிறார். சுப்மன் கில், ரோகித் சர்மா, ரிஷப் பண்ட் போன்ற வீரர்கள் சொதப்பி வருகின்றனர். விராட் மற்றும் ஜெய்ஸ்வால் முதல் டெஸ்டில் சதம் அடித்திருந்தாலும் மற்ற போட்டிகளில் பெரிதாக ரன் அடிக்கவில்லை. இந்த 4வது போட்டியில் வெற்றி பெற இவர்கள் ரன் குவிக்க வேண்டியது அவசியமாகிறது.

இந்நிலையில் ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட்டைப் போல டெஸ்ட் போட்டிகளிலும் சுப்மன் கில் அதிரடியான ஷாட்டுகளை அடித்து சுமாராக விளையாடுவதாக முன்னாள் வீரர் தினேஷ் கார்த்திக் விமர்சித்துள்ளார். மேலும் சுப்மன் கில் சிறப்பாக விளையாட சில ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "சுப்மன் கில் கண்டிப்பாக பந்தை அடிப்பதில் கொஞ்சம் டெக்னிக்கல் தவறை கொண்டுள்ளார். வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் நீங்கள் அதிகமாக விளையாடும்போது இப்படித்தான் பந்தைஅடிப்பீர்கள். டிராவிஸ் ஹெட்டும் அதை செய்கிறார். ஆனால் அதையும் தாண்டி வெற்றிகரமாக செயல்படும் வழியைக் கண்டறிந்துள்ளார். ஆனால் சுப்மன் கில் போன்ற வீரர்கள் இந்தியாவில் பேட்டிங் செய்யும் விதம் மற்றும் சொந்த மண்ணுக்கு வெளியே பேட்டிங் செய்யும் விதம் ஆகியவற்றின் வலையில் சிக்கியுள்ளதாக நான் நினைக்கிறேன்.

அதாவது பந்தை பவுலர் வீசியதும் இது புல்லர் பந்தாக இருக்கும் என்பதால் அதை அடியுங்கள் என்று உங்களுடைய மனம் சொல்லும். ஆனால் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு செல்லும் வீரர்கள் புல்லர் பந்துகளுக்கு எதிராக சாதாரண பயிற்சியிலேயே மாற்றத்தை செய்வார்கள். குறிப்பாக புதிய பந்துகளை அதிரடியாக எதிர்கொள்ளாமல் மெதுவாக அடிப்பார்கள்.

அத்துடன் உடலுக்கு நெருக்கமாக பந்தை அடிக்க முயற்சிப்பார்கள் அல்லது அடிக்காமல் விடப் பார்ப்பார்கள். 3வது இடத்தில் நீண்ட காலமாக விளையாடி வரும் சுப்மன் கில் மிகவும் சுமாரான ஷாட்டுகளை விளையாடுகிறார் என்று சொல்வதில் எந்த தயக்கமும் இல்லை. சொல்லப்போனால் மொத்த இந்திய பேட்டிங் துறையும் சில காலமாக நன்றாக விளையாடவில்லை. அவர்கள் தங்களுக்குத் தாங்களே அழுத்தத்தை போட்டுக் கொள்கிறார்கள்.

சுப்மன் கில் இந்தியாவில் விளையாடுகிறோம் என்று நினைத்துக் கொண்டு பவுலர் பந்தை கையிலிருந்து விட்டதும் அதை கடினமாக அடிக்க செல்கிறார். ஆனால் ஆஸ்திரேலியாவில் காபா போன்ற மைதானத்தில் ஆப் திசையில் விளையாடுவதை விட முன்னோக்கி விளையாடுவது எளிது. எனவே ஆஸ்திரேலியாவில் ஆட்டத்தின் தொடக்கத்தில், 'சரி நாம் இப்போது பந்தை தவற விடுவோம்' என்று சொல்லிக்கொண்டு விளையாட வேண்டும்" என கூறினார்.

## அது மட்டும் நடக்காவிட்டால் ரோகித் தாமாகவே ஓய்வு அறிவிப்பார் கவாஸ்கர் கணிப்பு

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் 3 போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடர் 11 என்ற கணக்கில் சமனில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 4வது போட்டி வரும் 26ம் தேதி நடைபெற உள்ளது.

முன்னதாக இந்த தொடரில் இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மாவின் செயல்பாடுகள் சிறப்பானதாக அமையவில்லை. பேட்டிங் மட்டுமன்றி கேப்டனாகவும் சுமாரான செயல்பாடுகளை வெளிப்படுத்தி வரும் அவர் மீது விமர்சனங்கள் எழுந்துள்ளன.

கடந்த நியூசிலாந்து தொடரில் ஓப்பனிங்கில் தடுமாறிய அவர் இந்தத் தொடரில் மிடில் ஆர்டரில் விளையாடுகிறார். அந்த இடத்தில் அதை விட மோசமாக விளையாடும் அவர் இந்தியாவின் தோல்விக்கு காரணமாகவும் இருந்தார்.

மேலும் டெஸ்ட்டில் கடந்த 13 இன்னிங்ஸ்களில் வெறும் 152 ரன்களை 11.69 என்ற மோசமான சராசரியிலேயே அடித்துள்ளார். இதனால் அவர் விரைவில் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவார் என்ற கருத்துகள் எழுந்துள்ளன.

இந்நிலையில் பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரின் கடைசி 2 போட்டிகளில் ரோகித் சர்மா பெரிய ரன்கள் குவிக்காவிட்டால் தாமாக ஓய்வு பெறுவார் என்று முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் கணித்துள்ளார். ஏனெனில் அணிக்கு பாரமாக இருக்கக்கூடாது என்று ரோகித் சர்மா நினைக்கக் கூடியவர் என கவாஸ்கர் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "கண்டிப்பாக அடுத்த 2 போட்டிகளில் விளையாடுவதற்கான வாய்ப்பை ரோகித் சர்மா பெறுவார் என்று உறுதியாக சொல்வேன். ஆனால் அதனுடைய இறுதியில் ஒருவேளை அவர் ரன்கள் எடுக்காவிட்டால் ஓய்வு பற்றிய முடிவை ரோகித் சர்மா தமக்குத்தாமே எடுப்பார் என்பது என்னுடைய உணர்வாகும். ஏனெனில் ரோகித் சர்மா மிகவும் மனசாட்சியுள்ள வீரர்.

அவர் எப்போதும் அணிக்கு பாரமாக இருக்க விரும்ப மாட்டார். அவர் இந்திய கிரிக்கெட்டின் மீது மிகவும் ஆழமான அக்கறை கொண்டவர். எனவே அடுத்த 2 போட்டிகளில் ரன்கள் குவிக்காவிட்டால் ரோகித் சர்மா தாமாகவே கேப்டன்ஷிப் பதவியிலிருந்து விலகுவார் என்று நினைக்கிறேன்" எனக் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.